பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 08 வியாழக்கிழமை (23 07 1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 238

# தந்திரிமலையில் குண்டு வெடிப்பு!
# விகாரைக்குள் பிரதம பிக்கு பலி!!

## செவ்வாய் இரவு சம்பவம்

கொழும்பு, ஜூலை 23

அநுராதபுரம் — மன்னார் மாவட்ட எல்லைப் பகுதியில், படையினரின் பாதுகாப்புக்கு உட்பட்ட தந்திரிமலை பௌத்த விகாரையில் நேற்று முன்தினம் இரவு குண்டு வெடித்தது. அதனால் விகாரையின் பிரதம குரு கொல்லப்பட்டார்.

சம்பவம் நிகழ்ந்த சமயம் அவர் தங்கி இருந்த அறையும் குண்டு வெடிப்பினால் சேதம் அடைந்தது.

குடா கொங்கத்வெட்ட விமல ஞான தேரர் (வயது 55) என்பவரே கொல்லப்பட்டவர் ஆவார்.

இரவு 7.40 மணியளவில் இவர் விகாரையில் உள்ள தமது அறையில் பத்திரிகை படித்துக்கொண்டிருந்தசமயம் குண்டு வெடித்ததாக கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

குண்டு வெடிப்புச் சம்பந்த மாக விசாரணை நடத்தும்படி அரசு உத்தரவிட்டுள்ளது என்றும்—

கைக்குண்டு ஒன்றே வெடித்திருக்கலாம் என்றும் தெரிவிக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கல்விப் புறக்கணிப்பை எதிர்த்து சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு?

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழ் மாணவர்களுக்குக் கல்வித் துறையில் இழைத்து வரும் அநீதிகளையும், புறக்கணிப்புகளையும் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்காட்டும் விதத்தில் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யும் சாத்தியம் குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

1990ஆம் ஆண்டு பல்கலைக்கழக அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவருக்கு உதவும் விதத்தில் அமைக்கப்பட்ட பல்கலைக்கழக அனுமதி நடவடிக்கைக் குழு நேற்றுப் பிற்பகல் கூடியது.

வழமையான பரீட்சையையும் விசேட பரீட்சையையும் வெவ்வேறாகக் கருதி அனுமதி வழங்கியதை ஆட்சேபித்து வழக்குத் தாக்கல் செய்வதற்காக விசேட குழு ஒன்று கொழும்பு சென்றிருந்தது தெரிந்ததே.

இந்தக் குழுவினர் கொழும்பில் பிரபல சட்டத்தரணி ஒருவருடன் வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர் என்றும்—

நேற்று முன்தினம் அல்லது நேற்று வழக்குத் தாக்கல் செய்யப்படவிருந்தது என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வழக்குக்குப் புறம்பாக —

பல்கலைக்கழக அனுமதியை பிரதான விடயமாகவும், ஏனைய கல்வித்துறைப் புறக்கணிப்புகளை சுட்டிக்காட்டி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழ நீதி நிர்வாக அமைப்புகளின் சேவை இடை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

தமிழீழ நீதி நிர்வாக அமைப்புகளின் சேவை இன்று முதல் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழீழ நீதி நிர்வாக தலைமைச் செயலகம் விடுத்துள்ள விசேட அறிவித்தலில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ நீதி நிர்வாகத் துறையின் கீழ் இயங்கும் அனைத்து செயலகங்களின் சேவைகளும், மேல்முறையீட்டு மன்றுக்கள், ஆரம்ப நீதிமன்றுகள், இணக்கமன்றுக்களினதும் சேவைகளும், செயற்பாடுகளும் 23 - 07 - 92 இல் இருந்து எமது மறு அறிவித்தல் வெளியிடப்படும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதனை மேற்படி மன்றுக்களின் சகல உறுப்பினர்களுக்கும், அனைத்து தமிழீழ மக்களுக்கும் அறியத்தருகின்றோம்—

அத்துடன் சகல இணக்க மன்று, ஆரம்ப நீதிமன்று உறுப்பினர்களையும் தத்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காங்கேசன் களஞ்சியத்தில் தேங்கிய உணவு பொருள்கள்

### கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 23

காங்கேசன்துறை களஞ்சியத்தில் பழுதடையும் நிலையை எட்டியுள்ள அரிசி, மா போன்றவற்றை 'மெரினால்' கப்பலில் ஏற்றி வந்து பருத்தித்துறை ஊடாக குடாநாட்டுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் கொழும்பில் புனர் வாழ்வு அமைச்சு அதிகாரிகளுடன் பேசி இது தொடர்பான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

அது சம்பந்தமான தகவல் நேற்று யாழ். செயலகத்துக்குக் கிடைத்தது.

சுமார் இரண்டாயிரம் தொன் உணவுப் பொருள்களை ஏற்ற ஏற்பாடாகியுள்ளதாக அரச அதிபர் அந்தத் தகவலில் குறிப்பிட்டுள்ளார்.

இப் பொருள்களை எடுத்துவர காங்கேசன்துறை நோக்கிச் சென்ற வாகன அணி முன்னர் தடைப்பட்டதாலேயே இந்த மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(இ-3)

## பரீட்சை முடிவு ஒரு சில தினங்களில்

யாழ்ப்பாணம், ஜூலை 23

கடந்த ஏப்ரல் மாதம் நடந்த ஜி.சீ.ஈ. [உயர்தர] விசேட பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த ஒரு சில தினங்களில் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ் அரச அதிபர் திரு. கா.மாணிக்கவாசகர் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் இருந்து அனுப்பிய செய்தியில், மூன்று நாட்களில் பரீட்சை முடிவுகள் யாழ்ப்பாணம் அனுப்பப்படும் என்று தெரிவித்திருந்தார்.

[இ-162-3]

## பீரங்கித் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 23

காரைநகர் கடற் பிராந்தியத்தில் இருந்து கடற்படையினர் நேற்று பொன்னாலை, நெல்லியான் கரையோரப் பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதலை நடத்தினர். நேற்று முன்தினம் ...

[இ-15-28]

## வாழைச் சேனையில் தமிழர் மீது தாக்குதல்

கொழும்பு, ஜூலை 23

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டம் சித்தாண்டியில் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து நேற்று வாழைச்சேனையில் தமிழர்களுக்கு எதிராக முஸ்லிம்கள் கலவரத்தில் இறங்கினார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. தமிழ் சாரதி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கலவரத்தை அடக்க பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது இரண்டு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர் என்று ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்தது.

வாழைச்சேனயில் முஸ்லிம்கள் வீதியால் சென்ற தமிழர்களின் வாகனங்களை நோக்கி கற்களை வீசினார்கள் என்றும் அப்போதே தமிழ் சாரதி ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கல்வீச்சுக்கு உள்ளான இந்த வாகனத்தின் சாரதி வாகனத்தைக் கட்டுப்படுத்த இயலாது முன்னால் சென்று கொண்டிருந்த பொலீஸ் ஜீப்புடன் மோதினார் என்றும் இந்தச் சம்பவத்தில் ஜீப்பில் இருந்த பொலிஸ்காரர் ஒருவரும் கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் நேற்று முன் தினம் சித்தாண்டியில் வைத்து ரயில் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 40க்கு அதிகம் என்றும் அவர்களில் பலர் முஸ்லிம்கள் என்றும் தமிழ் கட்சிகளில் ஒன்று தெரிவித்துள்ளது.

[இ-எ-10]

## முஸ்லிம்களில் பலரை காணவில்லையாம்

கொழும்பு, ஜூலை 23

சித்தாண்டியில் நேற்று முன்தினம் ரயிலில் நடத்தப்பட்ட தாக்குதலின் போது முஸ்லிம்கள் பலர் காணாமற் போய் விட்டனர் என்று மட்டக்களப்பு எம்.பி ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் வாரம் மூன்று தடவைகள் சேவையில் ஈடுபடும் இந்த ரயிலுக்கு அரசு சரியான பாதுகாப்பு வழங்கவில்லை என்றும் அவர் குற்றஞ்சாட்டினரார்.

இதற்கிடையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பதற்றம் நிலவுவதால் அதிரடிப் படையினர் அங்கு குவிக்கப்பட்டுள்ளனர் என்று ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

[இ-எ]

## லிங்க நகரில் புதிதாக சிங்களக் குடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 23

திருகோணமலை மாவட்டம் லிங்க நகரில் புதிதாக சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அங்குள்ள வீரகத்திப் பிள்ளையார் கோவில், கிருஷ்ணன் கோவில் ஆகியவற்றுக்குச் சொந்தமான காணிகளில் இருநூற்றுக்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் அத்துமீறிக் குடியேற்றப்பட்டுள்ளன.

குடியேற்றப்பட்டுள்ள குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்றுமாறு மேற்படி கோவில்களின் நிர்வாகத்தினர் கேட்டுக் கொண்ட போதும் அதனால் பயன் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

[இ-5]

## மேலும் 2 தமிழர்களின் சடலங்கள் கண்டுபிடிப்பு

வாழைச்சேனைப் பதியில் மேலும் இரண்டு தமிழர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆரையம்பதியைச் சேர்ந்த அருணாசலம், களுவன்கேணியைச் சேர்ந்த தங்கராசா மகேஸ்வராசா ஆகியோரது சடலங்களே அவை என அடையாளம் காணப்பட்டுள்ளது.

வாழைச்சேனைப் பகுதியில் அண்மையில் இதே போன்று நான்கு தமிழர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டிருந்தன.

வாழைச்சேனையில் உள்ள தமிழ் அகதி முகாமில் இருந்த எட்டுப்பேர் முஸ்லிம் வன்முறைக் கும்பல் ஒன்றினால் சமீபத்தில் கடத்திச் செல்லப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

[இ-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண திருச்சபை

யாழ்ப்பாணத்திலுள்ள தென்னிந்திய திருச்சபையின் தொழிற் பயிற்சி நிலையம் 25 - 07 - 1992 அன்று மாலை 3.30 மணிக்கு பேராயர் மகாகனம் டி. ஜே. அம்பலவாணர் அவர்களால் 41 ஆம் இலக்கம், 4 ஆம் குறுக்குத் தெருவில் உள்ள நகரப்புற பணிமனையில் திறந்து வைக்கப்படவுள்ளது. பயிற்சிக்கு விண்ணப்பித்தவர்களும் தவறாது சமூகம் தரவும்.

—செயலாளர்

ஆதீனக் காரியாலயம் தென்னிந்திய திருச்சபை
வட்டுக்கோட்டை. யாழ். பேராயம்.

[C/2937]

---

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து)
சுன்னாகம்.

## அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் கூட்டப்படவுள்ளமையால், சங்க எல்லைப் பரப்பிலிருந்து இடம் பெயர்ந்து, வேறு இடங்களில் வதியும் பொதுச்சபைப் பிரதிநிதிகள், தற்போது தாங்கள் வதியும் முகவரிகளை நேரிலோ அல்லது தபால் மூலமோ 31-07-92 ஆம் திகதிக்குள் அறியத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

- செயலாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
22-07-92.

(ஜ-2487)

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,

யாழ். கிளை தலைமையகம்

### யாழ் பிரிவு புதிய இடைக்கால நிர்வாகசபை உறுப்பினர்கள்

21-07-92 செவ்வாய்க்கிழமை, பிற்பகல் 4.00 மணிக்கு யாழ் பிரிவு சந்தோரில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் — திரு. கே. வைதீஸ்வரன்
உப தலைவர் — திரு. எம். தம்பித்துரை
செயலாளர் — திரு. எஸ். எஸ். மரியதாஸ்
பொருளாளர் — திரு. ஜி. எஸ். வேலாயுதம்

நிர்வாக சபை உறுப்பினர்கள்:

செல்வி எல். பி. தேவா
திரு. எப். ஆர். எப். அருட்சோதி
திரு. எ. குணரட்ணம்
திரு. எஸ். தவசீலன்
திரு. கே. முருகமூர்த்தி

இவர்கள் இடைக்கால நிர்வாகக்குழு உறுப்பினராகவும், பிரிவு தேர்தல் ஆயத்தகுழு உறுப்பினராகவும் செயற்படுவர்.

73, கண்டி வீதி, ச. சிவானந்தராசா
யாழ்ப்பாணம். கௌரவ செயலாளர்
22-07-92

[சி/2758]

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
### அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு:
04-05-1910

உதிர்வு:
24-06-1992

### திருமதி கந்தப்பு இலட்சுமி

எங்கள் புகழ்பூத்த தந்தை எமை இளவயதில் விட்டுப்பிரிய நேர்ந்தபொழுதும் பொறுப்புடன் எம்மை வளர்த்து ஆளாக்கிய எமது அன்புத் தாயாரின் ஆத்ம சாந்திக்காக நாம் பிரார்த்திக்கின்றோம்.

நாளை (24-07-92) நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டி வைபவத்திலும், வீட்டுக்கிருத்திய வைபவத்திலும் கலந்துகொண்டு, மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புதுத்தோட்டம்,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

[21865]

---

## உற்சவம்

மயிலணி, ஜூலை 23

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் கோவிலின் அம்மன் வாசல் அருள்மிகு ஸ்ரீ சொர்ணாம்பிகை அம்பாளின் வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழன் காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும். [த-89]

## நாளை

யாழ்ப்பாணம், ஜூலை 23

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலை, பண்பாட்டுக் கழகம் நடத்தும் பாலர் கலை விழாவும், மாநகரசபை ஆதரவில் இயங்கும் ஞானசம்பந்தர் பாடசாலையின் 20 ஆவது நிறைவு விழாவும், நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நல்லை ஆதீன கலா மண்டபத்தில் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ குரு மகா சந்நிதானம் தலைமையில் நடைபெறும். [த]

## உதவிப்பணம்

யாழ்ப்பாணம் ஜூலை 23

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உதவிப் பணம் பெறுபவர்களுக்குரிய மார்ச் ஏப்பிரல் மாதக் கொடுப்பனவுகள் இன்று வியாழக்கிழமை தொடக்கம் யாழ். அடைக்கலமாதா கோவிலுக் கருகாமையில் உள்ள அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. [த]

## ஆங்கில ஆசிரியர் போட்டி பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 23

ஆங்கில ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

கொழும்பில் இருந்து நேற்று செயலகத்துக்கு அனுப்பப்பட்ட செய்திக் குறிப்பில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

## அகதிகளுக்கு அமெரிக்கா உதவி

கொழும்பு, ஜூலை 23

நாடு திரும்பும் இலங்கை அகதிகளுக்கென அமெரிக்கா 2கோடி, 10லட்சம் ரூபாவை உதவியாக வழங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை திரும்பும் அகதிகளின் அவசர தேவைகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படவிருக்கிறது.

கொழும்பில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் இப்பணத்தைப் பெற்றுக்கொள்ளும்.

தென் ஆசியாவில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் பொதுத்திட்டத்துக்கு வழங்கப்பட்ட 30 லட்சம் டொலர் நிதி உதவிக்கு மேலதிகமாக அமெரிக்க அரசாங்கம் இந்த நிதி உதவியை வழங்க முன்வந்துள்ளது. (இ-எ)

## கிராமசேவை அலுவலர் பரீட்சை

யாழ்ப்பாணம் ஜூலை 23

கிராமசேவை அலுவலர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் விசேடமாக நடத்தப்படவிருக்கிறது.

நாடெங்கும் இந்தப் பரீட்சை நடைபெற்ற சமயம், யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு அமுலில் இருந்ததால் யாழ்ப்பாணத்தில் மட்டும் இந்தப் பரீட்சை நடைபெறவில்லை.

கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. ஐ. வைத்திலிங்கத் [illegible] துள்ளார் [இ-3-162]

---

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வி
### சுகன்யா சிவசுப்பிரமணியம்

காரைநகரைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் - நந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வி சுகன்யா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று 23 - 07 - 1992 வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, தாத்தா, மாமாமார், மாமிமார், பெரியப்பா, சித்தப்பாமார், சித்தி மற்றும் உறவினர்களும் பாலாவோடை அம்பாள் அருளால் பல்கலைகளையும் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

றெயில் றோட்,
கொக்குவில்.

[21858]

---

## பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆண்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 31 - 07 - 92 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.

(1) கணக்கு இலிகிதர்
(2) சஞ்சிகை உதவி ஆசிரியர்

கணக்கு இலிகிதர்: தகமைகள்

க. பொ. த (உயர்தரம்) கணக்கியலில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

வயதெல்லை: 20 தொடக்கம் 40 வரை

சஞ்சிகை உதவி ஆசிரியர்: தகமைகள்

க. பொ. த (சாதாரணதரம்) எழுதுவதில் திறமையும், செய்திகள் சேகரிப்பதில் ஆர்வமும் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

விண்ணப்பம் அனுப்பும் முகவரி

பொறுப்பாளர்,
பனை, தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம்,
25, பொன்னப்பா வீதி,
யாழ்ப்பாணம்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் நீண்டகால போசகராக இருக்கும் வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த முன்னாள் யாழ்ப்பாணம் நீதிவான் திரு. க. வை. நவரெத்தினம் அவர்களின் மறைவையிட்டு எமது நிலையம் சார்பில் இறுதி அஞ்சலியை செலுத்துகின்றோம்.

இங்ஙனம்
ஐயனார் கோவிலடி சனசமூக நிலையத்தினர்

[21867]

---

## எமது அஞ்சலி

### அமரர் க. வை. நவரத்தினம்

எமது சங்கத்தின் முக்கிய உறுப்பினராகவும் செயலாளராகவும் இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்கு அளவற்ற சேவையாற்றிய அமரர் க. வை. நவரத்தினம் (ஓய்வு பெற்ற யாழ். நீதிவான்) அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆறுதல்கள்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலர்
பழைய மாணவர் சங்கம்

யாழ் இந்துக் கல்லூரி.

(சி-2759)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனசக்தி உதவி பெறுபவர்கள்

# முதலீட்டுத் தொகையாக ரூ. 25 ஆயிரம் பெறுவர்

## திட்டம் செப்டெம்பரில் அமுலுக்கு வரும்

கொழும்பு, ஜூலை 23

ஜனசக்தி உதவி பெறும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் முதலீட்டுத் தொகையாக 25 ஆயிரம் ரூபா வழங்கும் திட்டம் எதிர்வரும் செப்டெம்பர் 6ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் என கொள்கை, திட்டமிடல் ராஜாங்க அமைச்சர் விமல்விக்கிரமசிங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒவ்வொரு குடும்பத்தின் பேரிலும் 25 ஆயிரம் ரூபா நிரந்தர வைப்பு செய்யப்பட்டு, மாதாமாதம் அதன் வட்டியான 250 ரூபா அக்குடும்பங்களுக்கு வழங்கப்படும்.

மேலும், சிறு தொழில்களை ஆரம்பிக்க இந்த 25 ஆயிரம் ரூபாவை முதலீடாக வைத்து வங்கிகளிடமிருந்து கடன் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ராஜாங்க அமைச்சர் கூறினார். (ஒ-10)

## 10ஆக அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 23

மட்டக்களப்பு - சித்தாண்டியில் நேற்று முன்தினம் ரயில் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10ஆக அதிகரித்துள்ளது. இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் 15 பேர் என்றும் அறிவிக்கப்பட்டது. [த]

## 'கிளினிக்'குகள் கந்தரோடையில்

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை ''கிளினிக்''குகள் சுன்னாகம் கந்தரோடை சனசமூக நிலையத்தில் இயங்க ஆரம்பித்துள்ளன.

மல்லாகத்தில் இயங்கிய இந்தக் கிளினிக்குகள் விமானத் தாக்குதலை அடுத்து தற்சமயம் கந்தரோடைக்கு மாற்றப்பட்டுள்ளது.

திங்கட்கிழமைகளில் இருதய நோய் சம்பந்தப்பட்ட கிளினிக்கும், புதன்கிழமைகளில் குழந்தைகளுக்கான கிளினிக்குகளும், சனிக்கிழமைகளில் சலரோகக் கிளினிக்குகளும் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏராளமான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ-68)

## நிரந்தர நியமனம்

யாழ். செயலகத்தில் பல வருடங்களாக அமைய அடிப்படையில் கடமையாற்றிய 12 சிற்றூழியர்கள் நிரந்தரமாக்கப்படவிருக்கின்றனர்.

அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பில் பேச்சு நடத்திய பின் இது குறித்து யாழ். செயலகத்துக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ஒ-3)

## நல்லூர் உற்சவ கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஜூலை 23

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும்.

உற்சவத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு, சுகாதாரம், போக்குவரத்து, தொண்டர் சேவை ஆகியவை பற்றி இக் கலந்துரையாடலில் ஆராயப்படும். [த-30]

## நேர்காணல் அரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். இலக்கிய வட்டத்தினர் ஏற்பாடு செய்துள்ள 'நேர்காணல் அரங்கு' நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறும்.

இந் நிகழ்ச்சியில் கலைச் செல்வி ஆசிரியர் 'சிற்பி' சரவணபவனும், ஈழநாடு முன்னாள் பதில் ஆசிரியர் திரு. பி. எஸ் பெருமாளும் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வர்.

## கௌரவிப்பு

கொழும்புத்துறை, ஜூலை 23

யாழ். ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தில் தொடர்ச்சியாக பத்துத் தினங்கள் 'பெரியபுராண சொற்பொழிவு' நிகழ்த்திய திரு. த. சிவகுமாரன், இன்று வியாழக்கிழமை இரவு 9-30 மணிக்கு ஆலயத்தில் வைத்து பொன்னாடை போர்த்தி, பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளார். (ஒ-30)

## ம. எண்ணெய் விநியோகம்

கொழும்புத்துறை துண்டிச் சந்தியில் வைத்து நேற்று முன்தினம் பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்யப்பட்டது.

உலர் உணவு அட்டைக்கு ஒரு லீற்றர் வீதம் [25 ரூபாவுக்கு] வழங்கப்பட்டது.

காவல்துறையினரால் கைப்பற்றப்பட்ட மண்எண் ணெய் [illegible] பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-30]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 மாத ஆண் குழந்தையின் வயிற்றில் 3 சிசுக்கள்!

புதுடில்லி, ஜூலை 23

ஐந்து மாத ஆண் குழந்தை ஒன்றின் வயிற்றில் இருந்து வளர்ச்சியடையாத 3 சிசுக்கள் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டன.

புதுடில்லியிலுள்ள பத்ரா மருத்துவமனையிலேயே இச் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

இக் குழந்தை மூன்று மாதமாக இருக்கும்போது அதன் வயிற்றில் சிசுக்கள் இருக்கும் அறிகுறிகள் தென்பட்டன. ''ஸ்கான்'' பரிசோதனை மூலம் சிசுக்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து டாக்டர்கள் இந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்டனர்.

கடந்த மாதம் சத்திரசிகிச்சை நடந்ததாகவும் குழந்தை தற்போது நலமுடன் இருப்பதாகவும் டாக்டர்கள் தெரிவித்தனர். இது முழு உலகிலும் ஓர் அபூர்வமான சம்பவம் என டாக்டர்கள் கருத்துத் தெரிவித்தனர். [த-10]

# தமிழரின் இன்றைய நிலைக்கு தொண்டா கூறும் காரணம்

## தமிழகத்தையும் சாடுகிறார்

கொழும்பு, ஜூலை 23

எனது யோசனையைத் தமிழக மக்கள் ஏற்றிருந்தால் தமிழர் மீது என்றுமே தாக்குதல் நடந்திருக்காது.

''சிறந்த தமிழர்'' என்ற விருதைப் பெற்றுக் கொண்டு சென்னையில் இருந்து கொழும்பு திரும்பிய அமைச்சர் தொண்டமான் முன் கண்டவாறு தெரிவித்தார்.

''1983இல் தமிழர் இங்கு தாக்கப்பட்டார்கள். அவர்களது உடைமைகள் நாசமாக்கப்பட்டன. நிர்க்கதியான இவர்களுக்கு தமிழக மக்கள் உதவுவதாயின், தலா 25 சதக் காசு கொடுத்தால் இவர்கள் தம்மை அபிவிருத்தி செய்வார்கள் என்று கூறிய போது அன்று என்னைத் தவறாக எடை போட்டனர்.

அன்று தமிழக மக்கள் அவ்வாறு செய்திருந்தால், தமிழர்கள் மீது தாக்குதல் எப்பொழுதுமே இடம்பெற வழி ஏற்பட்டிருக்காது'' —

அமைச்சர் தொண்டமான் கொழும்பில் இ. தொ. கா. தலைமைக் காரியாலயத்தில் நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் பேசுகையிலேயே முன்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்நாடு அறிஞர்கள் மன்றம் 1992ஆம் ஆண்டின் ''தலை சிறந்த தமிழர்' என்ற விருதை திரு. தொண்டமானுக்கு அளித்தது. [த-எ]

---

ஊற்று நிறுவனம்

### பதினோராவது வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் 1992-07-25ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நிர்வாகப் பகுதியில் அமைந்துள்ள சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அச்சமயம் அங்கத்தவர்கள் அனைவரையும் சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

1992-07-22

— செயலாளர்.

[21854]

---

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 07 — 06 — 1940

மறைவு: 23 — 07 — 1985

திருமதி

### லூட்ஸ் மார்கிறெட் றோஸ் தேவதாஸ்

(சறோஜினி)

மங்காத ஒளிவிளக்கே, மாகிறெட் லூட்ஸ் றோசாவே! தங்கக் குணம்படைத்த தாரகையே எமை விட்டு சென்றுவிட்டாய், ஏழாண்டு சொர்க்கமே வீடென்று செல்ல மனம் வந்ததுவோ! சொல்லம்மா றோசாவே! உன் பிரிவை எங்களால் தாங்கவே முடியாதம்மா! எம் மனதை நன்றாகப் புரிந்தவள் நீயம்மா, உன்மனதைக் கல்லாக்கி ஓடிவிட்டாய். எம்மைவிட்டு செல்லமனம் வந்ததுவோ, சொல்லம்மா றோசாவே!

அன்புக் கணவன், பிள்ளைகள்,
சகோதரர், உறவினர்கள்.

466/2 பி, யுவானியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[21844]

---

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



வீர ஜனனம்: 21 — 06 — 1953

வீர மரணம்: 23 — 07 — 1983

### லெப். செல்லக்கிளி அம்மான்

(சதாசிவம் செல்வநாயகம்)

(கல்வியங்காடு)

பத்துத் தடவை பாடை வராது
பதுங்கி கிடக்கும் புலியே தமிழா!
செத்து மடிவது ஒரேயொரு முறை தான்
சிரித்துக் கொண்டே போர்க்களம் வாடா!

— பழைய மாணவர் சங்கம்.

செங்குந்த இந்துக்கல்லூரி,
திருநெல்வேலி கிழக்கு.

[21852]

---

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்; 20 — 06 — 1969

ஆண்டவன் அடியில்: 23 — 07 — 1989

### செல்வன் மகாலிங்கம் மகேஸ்வரன்

மல்லிகையும் மலர்ந்த முல்லையும் தம்
மனம் கோணியுன் புன்னகைக்கு முகம் நாணும்
மாமலையும் கவரி மானினமும் உன்
குண நலமறிந்து தம் தலை குனியும்
மாரி மழைமேகம், மகேசண்ணா! ஓயாது
சொரிகின்ற எம் கண்ணீரைக் கண்டோயும்
வாரி வளர்த்தெடுத்த பெற்றோரும்
வாஞ்சையுடன் ''அண்ணா'' என்ற நாமும்
வாழ்கின்றோம் இங்கு உன் நினைவு நீங்காது.

- குடும்பத்தினர்.

நீர்வேலி வடக்கு.

[5173]

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்குண்டு

வியாபார நிலையங்களுக்குத் தேவையான பிளேன்பில் புத்தகங்கள் பல அளவுகளிலும், ஜெனன ஜாதகக் குறிப்பு மிகவும் நேர்த்தியான முறையிலும், தொகையாகவும், சில்லறையாகவும் நிதான விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள். ஸ்ரீ காந்தா அச்சகம் - புத்தகசாலை. 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [21847]

### தவறிவிட்டன

சரவணை கிழக்கைச் சேர்ந்த நாகலிங்கம் இராமச்சந்திரன் ஆகிய எனது குடும்ப அட்டையும், எனது மகன் இ. தவயோகராஜாவின் குடும்ப பதிவு அட்டையும் தவறிவிட்டன. இதை கண்டெடுப்பவர்கள் நிவாரணம் வழங்கும் சங்கம், கிளை இல. 13இல் அல்லது கீழ்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். 89, 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [21853]

### மணமகன் தேவை

வயது 32, இந்து, நட்சத்திரம்: மகம், லக்கினம் தனு, செவ்வாய் தனுவில், 5' 2'' உயரம், IAB முதற் தேர்வுக்கு தோற்றியவர், அரச கூட்டுத்தாபன வங்கி தொழில் நுட்ப அல்லது வணிக மணமகன் தேவை. உள்நாடு மட்டும். சீதனம் தரப்படும். ஜூலை 25இற்கு முன் விண்ணப்பிக்கவும். இல. 852, மே/பா, உதயன். [5172]

### வெற்றுப் பைக்கற்றுகள்

பால்மா வெற்றுப்பைக்கற்றுகள் தொகையாகவும், சில்லறையாகவும் தேவைப்படுகின்றன. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்; அண்ணா தொழிலகம், இணுவில். (சி-2934)

### இலவச திருமண சேவை

30 வயது, புனர்பூசம், செவ்வாய் 12, Diploma Accountancy படித்தவருக்கு மணாளன் தேவை. வெளிநாட்டு விண்ணப்பதாரர்களும் இலங்கைத் திருமணமாயின் கவனிக்கப்படும். சந்திப்பு: ஞாயிறு காலையில். து விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [5176]

### துர்க்கா திருமண சேவை

சகல தொழில்களிலும் மணமகன்கள் உண்டு. எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி. மல்லாகம். [5183]

### சங்கீதம்

தவணைத் தேர்விலே கூடுதல் புள்ளிகளைப் பெறுவதற்கு சங்கீதம் வினா-விடை உதவுகிறது. அனைத்துப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [21823]

### தட்டச்சு - றோணியோ

சகல விதமான தமிழ் — ஆங்கில தட்டச்சு, ஸ்ரென்சில் கட்டிங் மற்றும் றோணியோ வேலைகளை உங்கள் விருப்பம் போல் தரமான முறையில் செய்து கொள்ள நாடுங்கள் ''அருண் மார்க்கெட்டிங் அன்ட் அட்வேடைசிங் சேவிசஸ்'', இல.15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-2909)

### புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-2931]

### வினா - விடைகள்

G. C. E A/L, O/L மாணவர்களுக்கு கடந்தகால கணக்கியல் வர்த்தக பரீட்சை வினா - விடைகள். ஆக்கியோன்: இ. செல்வநாயகம் (B. Com.) றோயல் கல்லூரி, கிடைக்குமிடங்கள்: S. K. சாமி அன் கோ, நெல்லியடி, மண்டேவா ரேடர், மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம், கனகா புத்தகசாலை பருத்தித்துறை. [21822]

### A/L விலங்கியல் - 92

க.பொ.த. [உயர்தர] 92 விலங்கியல் மாதிரி வினாத்தாள் விற்பனையாகின்றது. ஆசிரியர்: R. ஈஸ்வரதாசன் B Sc. (Cey), Personal New Science Centre, யாழ்ப்பாணம். [சி-2929]

### வர்த்தகமும் கணக்கீடும்

ஆண்டு 9, 10, 11, வர்த்தகமும் கணக்கீடும் பகுதி I, 200 வினாக்களுடனும், விடைகளுடனும் வெளிவந்து விட்டது. ஆக்கம்: N. ராஜன் B Com., விலை 30/-. சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். [சி-2936]

### வெளிவந்து விட்டது

92 - August விஞ்ஞான பாடத்திற்கான முன் மாதிரிப் பரீட்சை வினாக்களும் விடைகளும், 91 - August, விசேடம் - 92 பரீட்சையின் வினாக்களும் - விடைகளும் விற்பனைக்குண்டு. 'A' Level Centre, 1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-2935]

### சோதிடம்

கல்வி, விவாகம், தொழில் தடைகள் தீரவும், குடும்பப் பிரச்சினை, நோய், தீராத கஷ்டம், வறுமை நீங்கவும் அதிர்ஷ்டம் அழைக்கிறது. சாதகத்துடன் நேரில் வரவும். பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். ஸ்ரீ சக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீ மாவை சோதிட நிலையம், 96, கோவில் வீதி, [ஸ்ரீ கைலாச பிள்ளையார் கோவில் சந்தி] நல்லூர். [21825]

---

## திருக்குடும்ப கன்னியர் மடம்

**யாழ்ப்பாணம்.**

## பழைய மாணவர் சங்கம்

மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தினது பொதுக் கூட்டம் **02—08—1992** ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்களும், பாடசாலையின் ஏனைய பழைய மாணவர்களும், ஆசிரியர்களும், தற்போதைய ஆசிரியர்களும் சமுகமளிக்குமாறு அழைக்கப்படுகின்றனர். தனிப்பட்ட அழைப்பு அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

செல்வி வ. இம்மானுவல்,
செயலாளர்.

[21855]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

ஓரடி மண்ணில்: 15 — 08 — 1946



ஆறடி மண்ணில்: 21 — 07 — 1991

## அமரர் சு. இரெத்தினசிங்கம்

[பப்பா மேத்திரி]

திதி: 23—07—1992

பண்பின் உறைவிடமே...!
பாசத்தின் ஒளிவிளக்கே...!
சுவடுதனில் எறும்புதனும் சிக்குறுவதைக்கண்டு
மனம் வருந்தும் எமதினியவரே...!
எமை விட்டுப் பிரிய உமக்கு
எவ்வாறு தானப்பா மனம் வந்தது...!
பேசும் மொழியில் கபடமில்லை
செய்யுந்தொழிலில் சோர்வில்லை...!
கட்டடக் கலையதனை உனக்கு
கைவந்த கலையாக்கிய நின் புகழ் வாழிய...!
காணும் உலகெலாம் மாயத்தோற்றமென்றோ
மண்ணுலகில் இருந்து விண்ணுலகம் சென்றாய்?
எம் தெய்வமே நீரகன்று ஓராண்டாயினும் - உம்
நினைவு நூறல்லவா...?

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

-குடும்பத்தினர்.

மணல் தெரு, கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. [21796]

---

# நன்றி நவிலல்

17-07-1992 அன்று எங்கள் அன்புத் தந்தை வைத்தி. ஞானப்பிரகாசம் [ஜோன்பிள்ளை] அவர்களின் நல்லடக்கச் சடங்கில் பங்குபற்றி, அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்து நிற்கின்றோம்.

அருட்செல்வி யூவேமியாவும்,
சகோதரிகள் குடும்பத்தினரும்.

51, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,
பாஷையூர். [21857]

---

## ஓராண்டு நினைவு தினம்

தோற்றம்: 01 — 02 — 1963



மறைவு: 03 — 08 — 1991

## மைதிலி ரவீந்திரநாதன்

திதி: 23 — 07 — 1992

அன்பின் குலமகளே! எங்கள் குலவிளக்கே - நீ
என்றென்றும் அணைந்தும் அணையாத சுடர் விளக்கே!
பெற்றவளும் உடன்பிறந்தாரும் பதறித் துடிக்கையிலே
கண் நிறைந்த கணவனையும், கை நிறைந்த -
செல்வங்களையும் கலங்க விட்டு சென்று
ஓராண்டு ஆனதம்மா!
ஓராண்டு அல்ல ஓர் யுகமே ஆனாலும் உன்துயர்
எங்களுக்கு மாறாதம்மா!

உன் ஆத்ம சாந்திக்காக நல்லூரானையே வேண்டுகின்றோம்.

உன் பிரிவால் வாடி வதங்கும்;
கணவன், பிள்ளைகள் (ஜேர்மனி),
அம்மா, சகோதரர்கள், அன்ரிமார்.

511, பருத்தித்துறை றோட்,
நல்லூர்,
யாழ்ப்பாணம். [21826]

---

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணுக்கு: 15 — 11 — 1924



விண்ணுக்கு: 03 — 08 — 1991

அமரர்

## பரிமளம் முருகேசபிள்ளை

(முன்னாள் ஆசிரியை)

திதி: 23 — 07 — 1992

முத்து முத்தான இரத்தினங்கள் - கங்கை
முற்றத்தில் சிந்திய முத்துக்கள் - பிள்ளைகள்
எம் கண்ணில் சிந்திய நீர்த்துளிகள் பேராறு
நீ சென்று இன்றுடன் மாதங்கள் ஈராறு
வேண்டுகின்றோம் தினம் தினம் நாம் இங்கு ஆறாது
விண்ணுலகு சென்று விட்ட எம் தாயே!
உன் ஆத்மா சாந்தி அடைவது எம்பேறு:

பிரிவால் துயருறும்;
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

'வசந்தம்',
கோப்பாய் வடக்கு, கோப்பாய். [21829]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மலையும் மடுவும்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை வகுப்பதற்கென நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டு ஒரு வருடம் முடியப் போகிறது. இந்தத் தெரிவுக்குழுவே இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போவதாக ஆரம்பத்தில் விளாசித் தள்ளப்பட்டது. முழுப் பொறுப்பும் அதனிடமே வழங்கப்பட்டது போலவும் தெரிவுக்குழுவின் முடிவை எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதியே வெட்டி முழக்கினார். ஆனால், அதனால் இதுவரையில் ஐந்து சதவீதமேனும் நகர முடியவில்லை. அது நிற்க.

தெரிவுக் குழுவிடம் மக்கள் ஐக்கிய முன்னணி என்ற கட்சி சமர்ப்பித்த யோசனை படிப்பதற்கு சிரிப்பூட்டுவதாக உள்ளது. மாகாண சபையை ஒழித்து மாவட்ட சபைகளை உருவாக்க வேண்டும் என்பது அந்தக் கட்சியின் சிபார்சு. உலகம் முன்நோக்கி ஓடிக்கொண்டிருக்க பிரஸ்தாப கட்சி பின்நோக்கி நகர முயற்சிக்கிறது.

மாவட்ட சபை என்ற அமைப்பு அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு போதிய அளவினது அல்ல என்பதாலேயே அதனைவிடப் பெரிய மாகாணசபைத் திட்டம் வகுக்கப்பட்டது. மாகாண சபையும் போதியதல்ல என்பதால் தான் மாநில சுயாட்சி குறித்துச் சிந்திக்கப்பட்டது. ஆனால் அவை எல்லாவற்றையும் கீழே சரித்து வீழ்த்திவிட்டு மீண்டும் மாவட்ட சபை என்ற மட்டத்துக்கு ம. ஐ. முன்னணி சென்றுள்ளது.

தமிழர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் தன்னாட்சி அரசு அமைக்கக்கூடிய தனி நாடு ஒன்றை உருவாக்கவே விரும்புகிறார்கள். இடைநடுவில் எந்தப் படிநிலைகள் வந்தாலும் தனிநாடு என்பதே அவர்களின் இறுதி இலட்சியம்.

நிலைமை இவ்வாறிருக்க, அதற்கு அடுத்த படிநிலையில் உள்ள மாநில சுயாட்சியைத் தானும் சிந்திப்பதற்கேனும் சிங்கள அரசியல்வாதிகள் தயாரில்லை. மக்கள் ஐக்கிய முன்னணியின் யோசனை அதனை மிகத் தெளிவாகத் தொட்டுக் காட்டுகிறது.

ஆளுங்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தெரிவுக் குழுவுக்கு யோசனை சமர்ப்பிக்காமல் கண்ணாமூச்சி விளையாடி வருவது எழுதிக் களைத்துப்போன ஒன்று. இக்கட்டத்தில் மக்கள் ஐக்கிய முன்னணியை ஒருமாதிரி (Typical) சிங்கள அரசியல் கட்சியாகக் கருதுவதில் தப்பில்லை.

மொத்தத்தில், இனப்பிரச்சினை விவகாரத்தில் தமிழர்களின் அரசியல் நிலைப்பாடும் சிங்கள அரசியல்வாதிகளின் நிலைப்பாடும் முறையே மலையும் மடுவும் போல உள்ளன. இந்த இரண்டுக்கும் இடையில் தொடுகோடு வரைவதோ அல்லது இடைநிலைச் சமரசம் காண்பதோ நடைமுறைச் சிந்தனைக்கு அப்பாற்பட்டது. அதனையே தெரிவுக் குழுவும், சிங்கள அரசியல் கட்சிகளும் கோடிட்டுக் காட்டுகின்றன.

அதாவது சிங்கள அரசியல்வாதிகள் நியாயம் செய்வார்கள் என்று தமிழர்கள் எதிர்பார்த்திருக்கக்கூடாது. கேட்டு வாங்கும் நிலையை முற்றாக மறந்து, அபகரிக்கப்பட்ட சொந்த உரிமைகளை, சொத்துகளை பறித்து வாங்கத் தயாராக வேண்டும் என்பது நிலை நிறுத்தப்படுகிறது. ஆண்டுகள் பலவானாலும் தமிழர் நாடு உருவாகும் வரை உரிமைப் போரைத் தொடர வேண்டும் என்பதே முடிவாகிறது.

# வேதாரணியம் கடற்பரப்பில் இரண்டு மர்மப் படகுகள்!

### கடற்படையினருடன் துப்பாக்கிச் சண்டை

சென்னை, ஜூலை 23

தமிழ்நாடு - வேதாரணியம் கடற்பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 5மணியளவில் இரு மர்மப் படகுகள் காணப்பட்டதாகவும், அவற்றை மடக்கிப் பிடிக்க இந்திய கடற்படையினர் முயன்றபோதும் அவை தப்பிச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினருக்கும் படகுகளில் இருந்தவர்களுக்கும் இடையில் கடும் துப்பாக்கிச் சண்டை இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம், வேதாரணியம் கடற்பகுதியில் வைத்து மூன்று விடுதலைப் புலிகளைக் கடற்படையினர் கைது செய்தனர் என்று மற்றொரு செய்தி தெரிவிக்கிறது.

இவர்கள் பெருமளவு எரிபொருளை ''பினாஸ்ரிக்'' படகுகள் மூலம் யாழ்ப்பாணத்துக்கு கடத்த முயன்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் —

மாநில காவல் துறையினர் கோடியக்கரையை அடுத்த சுற்றுப் புறங்களில் விடுதலைப் புலிகள் ஒளித்து வைத்திருந்ததாகக் கருதப்படும் பெற்றோல், டீசல் ஆகியவற்றை ஏராளமாகக் கைப்பற்றினர் என்று கூறப்படுகிறது. [ஒ-த]

## அஞ்சலிக் கூட்டம்

மானிப்பாய், ஜூலை 23

யாழ். மருத்துவ பீட முன்னாள் பேராசிரியரும், மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமான காலஞ்சென்ற நவரட்ணம் சரவணபவானந்தனின் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 4மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

அன்னாரின் உருவப்படமும் திரை நீக்கம் செய்து வைக்கப்படும். (த-90)

## சர்ச்சைக்குரிய கந்தளமவில் விகாரைக்குள் சிலுவை!

### மற்றொரு கொந்தளிப்பு உருவாகிறது

கொழும்பு, ஜூலை 23

சர்ச்சைக்குரிய தம்புள்ளை, கந்தளமவில் மற்றொரு பிரச்சினையும் தலைதூக்கியுள்ளது. அங்குள்ள பௌத்த வழிபாட்டுத் தலம் (விகாரை) ஒன்றில் அண்மையில் பகிரங்கமாக சிலுவை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பௌத்த பிக்குகளும், பொதுமக்களும் பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளனர். அங்கு கொந்தளிப்பு நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது.

கந்தளமவில் உல்லாச ஹோட்டல் அமைப்பது தொடர்பாக அங்குள்ள பிக்குமாரும், மக்களும் ஏற்கனவே தமது எதிர்ப்பைக் காட்டி வருவது தெரிந்ததே.

அங்கு ஏற்பட்டுள்ள 'கொந்தளிப்பு' நிலையை சாதகமாகப் பயன்படுத்தி சிலரால் திட்டமிட்டு இந்தச் சிலுவை வைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

கந்தளமவில் அண்மையில் சத்தியாக்கிரகம் நடத்த ஏற்பாடு செய்தவர்களே அங்கு சிலுவை வைக்கக் காரணமானவர்கள் என்று ஒரு சாரார் குற்றஞ்சாட்டி உள்ளனர்.

சத்தியாக்கிரகத்தை ஏற்பாடு செய்தவர்கள் குறுகிய நோக்கத்தில் செயல்பட்டுள்ளனர் என்று வித்தியோதயா பிரிவேனாவின் தலைவர் சங்கைக்குரிய அக்குரட்டிய அமரவன்ச நாயக்க தேரர் தெரிவித்தார்.

இவர்கள் மதப் பூசலை ஏற்படுத்த முயல்கின்றனர் என்றும் அவர் கண்டித்தார். (ஒ-த)

### மீண்டும் ஆரம்பம்

தென்மராட்சி, ஜூலை 23

எரிபொருள் விலையேற்றத்தினால் நிறுத்தப்பட்டிருந்த மினிவான் சேவைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக தென்மராட்சி தனியார் வாகன ஒன்றியத்தினர் அறிவித்துள்ளனர். [த-117]

## புளியம்பழத்தில் இருந்து பழப்பாகு தயாரிக்க முயற்சி

புளியம்பழத்திலிருந்து பழப்பாகு தயாரிக்கும் பரீட்சார்த்த முயற்சியினை தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் உணவு பதனிடல் பிரிவு மேற்கொண்டுள்ளது. மேலும் தோடம்பழத்திலிருந்து பரீட்சார்த்தமாக பழப்பாகு தயாரிப்பதற்கான முயற்சிகளிலும் அது ஈடுபட்டுவருகின்றது.

உள்ளூரில் பெறக் கூடிய பழவகைகளை பதனிட்டு மென்பானங்கள், பழப்பாகு வகைகளைத் தயாரிக்கும் பணியிலும் இப் பிரிவு செயற்பட்டு வருகிறது. இதன் மூலம் உள்ளூர்ப் பழச் செய்கையாளர்கள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றனர். [த]

### சிறுவர் நூலகம்

வட்டுக்கோட்டை, ஜூலை 22

சங்கரத்தை சின்னம்மா வித்தியாலயத்தில் சிறுவர் நூலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ)

## மாணவரின் நலனை ஆசிரியர் கருத்தில் கொள்ள வேண்டும்

### பரிசளிப்பு விழாவில் பேச்சு

உடுவில், ஜூலை 23

இன்றைய கால கட்டத்தில் மாணவரின் கல்விக்கு பல விதத்திலும் இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றன. இழந்த பாடசாலைக் கல்வியை மாணவர்கள் ஏதோ ஒரு வகையில் ஈடுசெய்ய வேண்டும். எனவே ஆசிரியர்கள் விடுப்பு (லீவு) எடுத்தாலும் கூட மாணவரின் நலன் கருதி விடுமுறை கால வகுப்புகளை நடத்தி கல்விப் போதனையை நிறைவுசெய்ய வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போது யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அதிபர் திருமதி ம. திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் திரு. சுந்தரலிங்கம் மேலும் கூறியதாவது:

சேர். பொன். இராமநாதன் தமிழ் மக்களின் கல்வி, கலை, கலாசார, பண்பாட்டு துறைகளின் வளர்ச்சிக்கென விட்டுச் சென்ற சொத்துக்களை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என்றார்.

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பரிசில்களை வழங்கினார். இறுதியில் மாணவிகளின் கலை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

# ஆட்கொல்லியான இருதய வியாதி சிறுவயதிலிருந்தே ஆரம்பமாகிறது

## அளவோடு உண்டு, வளமோடு வாழப் பழகிக்கொள்ள வேண்டும்

யாழ். மருந்தகத்தில், சமீபத்தில் நடைபெற்ற இருதய வியாதி தொடர்பான ஆய்வரங்கு ஒன்றில் முன்வைக்கப்பட்ட கருத்துக்களின் தொகுப்பு.

எமது பகுதியில் இருதய வியாதி ஓர் பாரதூரமான சுகாதாரப் பிரச்சினையாகும். இது சம்பந்தமான கல்வி அறிவை மக்கள் மத்தியில் பரப்ப வேண்டும்.

இருதய வியாதியின் பலவித தன்மைகள் வருமாறு:- அவையாவன:-

1. அதி இரத்த அமுக்கம். இது ஓர் அமைதியான கொலையாளி.

2. [Stroke] மூளைக்கு இரத்தம் கொண்டு செல்லும் நாளங்கள் பழுதடைதல். இதனால் கை, கால் வழங்காமை, வாய் பேச முடியாமை ஏற்படுகின்றன.

3. [Angina] களைப்பு.

4. [Coronary Thrombosis] சடுதியாகத் தொடங்கும் நெஞ்சு நோ.

5. [Rheumatic Fever] வாதக் காய்ச்சல். மூட்டுப் பகுதிகளில் உளைவு ஏற்படுதல்.

இருதய வியாதியின் அறிகுறிகள்:-

1. கூடிய களைப்பு, அலுப்புத் தட்டுதல்

2. கருமமாற்றும் போது தொடர முடியாத நிலை.

3. சாதாரண வேலை செய்யும் போது இளைப்பு ஏற்படல்

4. அசாதாரண நேரங்களில் நித்திரை ஏற்படல்

5. தாம்பத்திய உறவில் ஏற்படும் மாற்றம்

6. கை, கால் குளிர்ந்த நிலை

7. உடல், உள ரீதியான செயல்பாட்டுத் தாக்கம் ஏற்படும் நிலை

8. கூடுதலாக சினங் கொள்ளல்

இருதய வியாதிகளுக்கான ஊக்குவிப்புக் காரணிகள்:-

தொகுப்பு: ஐ. செல்லையா

1. தேவைக்கதிகமான உணவு உண்ணல்

2. அளவுக்கதிகமான கொழுப்பு உணவு உண்ணல்

3. கூடிய கரைபடாத கொழுப்பு உட்கொள்ளல்

4. நார்சத்து உணவு பாவிக்காமை (மரக்கறி, பழவகை பாவிக்காமை)

5. தேவைக்கு அதிகமான சீனி பாவித்தல்

6. அளவுக்கு அதிகமான உப்பு பாவித்தல். ஒருவருக்கு 5கிராம் உப்பு போதுமானது. ஆனால் 20 கிராம் உப்பு உட்கொள்ளப்படுகிறது.

ஒரு நபரின் கொலஸ்ரோல் அளவு குறைந்தது 195mg ஆகவும், ஆகக் கூடியது 240mg ஆகவும் இருத்தல் வேண்டும். இதற்கு மேல் இருப்பின் அது ஆபத்தானது.

இருதய வியாதி ஆண்களுக்கே கூடுதலாக வருகிறது. சராசரி ஆண்களில் 15 பேருக்கு இருதய வியாதி வரும்போது பெண்களில் ஒருவருக்கே வருகிறது.

நன்மை பயக்கும் காரணிகள்:

1. வெள்ளைப்பூடு, வெங்காயம் கூடுதலாகப் பாவித்தல்; இவற்றில் கொலஸ்ரோல் எதிர்ப்புத் தன்மை உண்டு

2. தேநீர் ஓரளவு அருந்தல்

3. அஸ்பிறின் பாவித்தல். இது இரத்தம் உறைவதைக் குறைக்கிறது.

4. நல்லெண்ணெய் பாவித்தல்.

5. அளவோடு நார்சத்துள்ள உணவை உட்கொள்ளல்

இருதய வியாதி ஏற்படக் கூடியவர்கள்;

1. நடுத்தர வயதுப் பிராயமுள்ளோர், ஒரே இடத்தில் இருந்து வேலை செய்வோர்.

2. வயதானவர்கள்

3. சினைப்பை நீக்கப்பட்ட பெண்கள், மாதவிடாய் நின்ற பெண்கள்

4. நெருக்கீட்டு நிலையில் வேலை செய்யும் பொறுப்பிலுள்ளோர்.

5. கூடுதலாக புகைப்பிடிப்போர்

இருதயம் மிகவும் முக்கியமான உறுப்பு. இது நூறு வருடங்கள் வரை செயல்படக் கூடியது.

மற்றைய உறுப்புக்களில் தாக்கம் ஏற்பட்டால் ஓய்வு கொடுக்கலாம். இருதயத்திற்கு ஓய்வு கொடுக்க முடியாது. வேலைப் பளுவைக் குறைத்து, எமது உணவுப் பழக்கவழக்கத்தின் மூலம் சாதகமான முறையில் இருதயத்தைப் பாதுகாக்கலாம்.

இருதய நோய் சிறுவயதிலிருந்து ஆரம்பமாகிறது. எனவே அளவோடு உண்டு, வளமோடு வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

இருதய நோய் நாகரீக முன்னேற்றத்திற்கு கொடுக்கும் பரிசு. இது அதிகமாக வசதியான குடும்பங்களில் கூடுதலாகவுள்ளது. ஆரோக்கியமான, நிறைவான, எளிமையான வாழ்க்கை முறைமூலம் இருதய நோய்களைத் தடுக்கலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை

# விண்ணப்பப் படிவங்கள் நேற்று யாழ் வந்து சேர்ந்தன

கிளிநொச்சியில் கடந்த மூன்று வாரங்களாகத் தேங்கிக் கிடந்த, பாடசாலைகளுக்கான ஜி. சீ. ஈ. சாதாரணதர பரீட்சை விண்ணப்ப படிவங்கள் நேற்று யாழ். கல்வி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்தன.

பாடசாலைகளில் இருந்து தோற்றும் பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் முடிவு திகதி கடந்த மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்து விட்டது.

எனினும் மேலும் படிவங்களை நிரப்பி விரைவாக அனுப்புமாறு பரீட்சை ஆணையாளர் வடபிராந்திய கல்விப்பணிப்பாளருக்கு அறிவுறுத்தி உள்ளார்.

தனியார் பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 31 ஆம் திகதி யாகும். [இ 163-3]

# வெளிநாட்டு முகவர் நிலையங்களுக்கு கட்டுப்பாடு

கொழும்பு, ஜுலை 23

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்ஸி நிலையங்களுக்கு கடும் கட்டுப்பாடு அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ளது.

வேலை வாய்ப்பு ஏஜென்ஸிகள் தமது அனுமதிப்பத்திரங்களைப் புதுப்பிக்கக் கோரி விண்ணப்பிக்கும் போது அவர்கள் தமது செயற்பாடுகள் பற்றி நிரூபிக்க வேண்டும்.

கடந்த காலங்களில் எவ்வளவு பேரை வெளிநாடுகளுக்கு அனுப்பினார்கள் என்பது அரசுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், இந்த எண்ணிக்கையில் பணிப்பெண்கள் சேர்க்கப்படமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [த-எ]


## அறிவித்தல்

வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த உற்சவ திதி எதிர்வரும் 3-8-92 அன்று ஆரம்பமாகி 14-8-92 இல் முடிவடைகிறது. எதிர்வரும் 12-8-92 புதன்கிழமை முத்துமாரியம்மனின் தேர்த்தினமாகும். இத் தேர் உற்சவ பொது நாளில் திருநெல்வேலியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் ஒரு சிறப்பு விழாவை நடத்த அனைத்து விழா உபயகாரர்களும் அம்பாளின் அடியார்களும் முன்வந்திருப்பதால் மேற்படி ஆலயத்தில் இவ்விழா நடக்கும் என்பதை அம்பிகை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

— விழா அமைப்பாளர்கள்

[21859]



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் க. வை. நவரத்தினம்

எங்கள் ஸ்தாபனத்தில் நீண்ட காலம் இயக்குநராக இருந்து அளப்பரிய சேவையாற்றிய அமரர் க. வை. நவரத்தினம் ஓய்வுபெற்ற நீதிவான் அவர்கள் இயற்கை எய்தியதையிட்டு எங்கள் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

இயக்குநர்கள்,
தொழிலாளர்கள்,
(21860) யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்.



## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 03 — 10 — 1933



உதிர்வு 26 — 07 — 1989

திருமலையில் திருநெல்வேலியில்

### அமரர் ஸ்ரீ குமாரசாமி துரைராஜா

(ஓய்வுபெற்ற ஆங்கில தட்டெழுத்தாளர்)

திதி: 23-07-1992

''உள்ளத்துக் கினியனாய் உத்தமனாய் உறைந்திட்ட உம்முயிரை ஊடுருவிச் சென்றானோ ஈசன்; இல்லை, அந்நியரின் கனரக வாகனத்தில் வந்திட்ட காலன் அபகரித்தான் ஐயா! உம் ஆருயிரை.''

44, றெயில் றோட், கொக்குவில் கிழக்கு.

உங்கள் நினைவில் வாழும், மனைவி - பிள்ளைகள்

[21866]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இல கத்தில் உள்ள அச்சகத்தில் 23 07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## நனைந்த நிலையில் ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஜுலை 23

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் ஜுலை மாத வவுச்சர்கள் அடுத்த வாரத்தில் தபாலில் அனுப்பப்படவிருக்கின்றன.

செயலகம் வந்து சேர்ந்த வவுச்சர்களில் ஒரு பகுதி நனைந்த நிலையில் இருந்ததால், அவற்றைக் காயவிடும் வேலை செயலகத்தில் நடைபெற்றுவருகிறது. [இ-3]

## தொழில் உத்தியோகத்தர் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜுலை 23

தொழில் உத்தியோகத்தர் பதவிக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் அக்டோபர் மாதம் 6 ஆம் திகதி கொழும்பில் நடைபெற இருப்பதாக பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். [இ-3]

## மயிலிட்டி ஊழியர்கள் புறக்கணிப்பு

தெல்லிப்பளை, ஜுலை 23

காங்கேசன்துறை மயிலிட்டி மார்பு நோய் வைத்தியசாலையைச் சேர்ந்த 35 ஊழியர்களுக்கு கடந்த இரு வருடங்களாக ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கையால இந்த வைத்தியசாலை இயங்காத போதும், அங்கு கடமையாற்றிய ஊழியர்கள் தற்சமயம் யாழ்ப்பாணம், பளை, சங்கானை, பண்டத்தரிப்பு ஆகிய வைத்திய சாலைகளில் கடமையாற்றுகிறார்கள்.

இந்த ஊழியர்களுக்கு சீருடை வழங்கப்படுவதும் நிறுத்தப்பட்டுள்ளதாக புகார் கூறப்படுகிறது. (ஒ-68)

## புஷ்ஷின் செல்வாக்கு சரிகிறது

நியூயோர்க் ஜுலை 23

அமெரிக்காவில் ஜனநாயகக் கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்த பின் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் செல்வாக்கு சரிந்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு ஒன்றில் புஷ்ஷுக்கு 29 சதவீத வாக்குகளே கிடைத்தன ஜனநாயகக்கட்சி வேட்பாளர் பில் கிளின்ரனுக்கு 58 சதவீத வாக்குகள் கிடைத்தன.

### கல்விப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகச் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முயற்சி செய்ய வேண்டும் என்று கூட்டத்தில் யோசனை தெரிவிக்கப்பட்டது.

இதன்பொருட்டு வெளிநாடுகளில் உள்ள தமிழர்களின் உதவியைப் பெறுவது குறித்தும் ஆராயப்பட்டது.

அவுஸ்திரேலியா மற்றும் சில நாடுகளில் உள்ள பொது அமைப்புகள் சில இந்த விடயத்தில் தமிழர்களுக்கு உதவவும், தமிழர்களுக்காகக் குரல் எழுப்பவும் தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ-உ-3]

### தந்திரிமலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது.

இந்தப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ் மா அதிபரும், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் சம்பவம் நடந்த இடத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட விகாரை [illegible] குறிப்பிடத்தக்கது. (இ-த-10)

# பிரபாவை இந்தியா கொண்டு செல்வது முடியாதது அல்ல

## கார்த்திகேயனின் நம்பிக்கை இது

சென்னை, ஜுலை 23

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனை இந்தியாவுக்குக் கொண்டு வருவது முடியாத காரியமல்ல.

ராஜீவ் கொலையை விசாரிக்கும் விசேட விசாரணைப் பிரிவின் தலைவர் டி. ஆர். கார்த்திகேயன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரபாகரனை இந்தியாவுக்குக் கொண்டுவர முடியுமா என்று அவரிடம் கேட்டபோது ''செய்யமுடியாதது என்று எதுவும் இல்லை. செய்யக் கூடியதை முதலில் செய்து பார்க்க வேண்டும் என்ற நம்பிக்கை உடையவன் நான்'' என்றார்.

செய்யக் கூடியதை முதலில் செய்ய வேண்டும். பின்னர் செய்யமுடியாததை செய்து பார்க்க வேண்டும் என்றும் அவர் சொன்னார். [ஒ-த]

### நீதி நிர்வாக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது கோட்ட [பிரிவு] நீதி நிர்வாகப் பொறுப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்—

இப்படி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]


## மரண அறிவித்தல்கள்

### சிவலிங்கம் ஆதிமூர்த்தி

(ஓய்வுபெற்ற கட்டட இலாகா பரிசோதகர்)

காரம்பன் மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சங்கானை மேற்கு, வடலியடைப்பை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சிவலிங்கம் ஆதிமூர்த்தி 22-07-92 நேற்றுக் காலமானார். இவர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், அரிஅரன் (Translanka, Colombo), கிருபாகரன் (U. K), காலஞ்சென்றவர்களான ஞானகரன், கருணாகரன் ஆகியோரின் தகப்பனாரும், அதித்தியாவின் பேரனும் ஆவார். ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். உறவினர்களும், நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. புவனேந்திரன்

வடலியடைப்பு,
சங்கானை மேற்கு,
பண்டத்தரிப்பு.

[21861]

### சுப்பையா தியாகராசா

[ஓய்வுபெற்ற பிரதம லிகிதர்]

சுப்பையா தியாகராசா காலமானார். இவர் காலம் சென்ற சுப்பையா பாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், கமலாதேவியின் அன்புக் கணவரும் செல்லப்பா பூரணத்தின் மருமகனும், திருமதி பிரான்சிஸ் வத்சலா [நோர்வே], நிர்மலா, சுதாகர், சசிகலா, சியாமளா ஆகியோரின் அன்புத் தந்தையும், மாணிக்கவாசகர் [லண்டன்], பாலசுந்தரம் [கனடா], செல்வரத்தினம் [வர்த்தக வங்கி - யாழ்] ஆகியோரின் சகோதரரும், சண்முகநாதன் [ஓய்வுபெற்ற தபாலக ஊழியர்], தியாகராசா [இ. மி. சபை], செல்வராசா [மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம் யாழ்.], சோதிராசா [பிரான்ஸ்], சத்தியசீலன் ஆகியோரின் மைத்துனரும் தில்லையம்பலம் செல்லம்மா தம்பதிகளின் பெறாமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

113, சந்தனமாதா கோவில் ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

[5190]

### திரு. க. வை. நவரெத்தினம்

[முன்னாள் யாழ்ப்பாணம் நீதிவான்]

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த திரு. க. வை. நவரெத்தினம் 20-07-92 இல் காலமானார். அன்னார் சத்தியபாலதேவியின் அன்புக் கணவரும், ரவீந்திரநாதன் [O. T. Bank கொழும்பு], ஜெயந்தி, ஜெயலக்சுமி [ஆசிரியை, யாழ். இளையதம்பி வித்தியாலயம்], ஜெயதேவி [ஆசிரியை, நுகேகொட தமிழ் மகாவித்தியாலயம்], மாலினி [ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், திருமதி பராசக்தி செல்வரத்தினத்தின் அன்பு மருமகனும், ஸ்ரீபவன் [சிரேஷ்ட அரச சட்டத்தரணி கொழும்பு], வெற்றிவேல் [வானொலி தொழில் நுட்ப அதிகாரி, ஓமான்], மாலதி ஆகியோரின் அன்பு மாமனாரும், தயாபரன், கஜானன் ஆகியோரின் அன்புப்பாட்டனாரும், திருமதி பரமேஸ்வரி கந்தசாமி, சுந்தரராஜா [இளைப்பாறிய மாவட்ட தொலைத் தொடர்பு பரிசோதகர்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி சரோஜாதேவி கணேசதாசன் [வாஷிங்டன்] திருமதி. இரத்தினாதேவி கிதம்பரநாதன் [நியூசிலாந்து], ராகவன் [முகாமையாளர், வர்த்தகவங்கி புறக்கோட்டை] வ. கந்தசாமி [இளைப்பாறிய முதல்வர்] திருமதி கமலாம்பிகை சுந்தரராஜா ஆகியோரின் மைத்துனருமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று [23-07-92] வியாழகிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக 10 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

22, இராஜவில்லா,
ஐயனார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்:
திருமதி சத்தியபாலதேவி

[5191]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org